TNKR080004662023

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**
**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் தேதி திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.171/2023**

**CNR No.TNKR08-000466-2023**

கனரா வங்கி, குளித்தலை கிளை,
அதன் கிளை மேலாளர் மூலமாக ... வாதி

**/எதிர்/**

1. S.நிவாஸ்குமார்
2. P.சாமிகண்ணு ... பிரதிவாதிகள்

**தீர்ப்புரை**

வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.6,35,277/-ஐ 10.90% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 27.04.2023 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 09.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 16.03.2026 |
| வாதிக்காக | : | திரு.K.ஷேக் அன்வர்தீன் - வழக்கறிஞர் |
| பிரதிவாதிகளுக்காக | : | திரு.K.S.M.சாகுல் அமீது - வழக்கறிஞர் |

**1) பிராதின் சுருக்கம் :-**

இவ்வழக்கின் வாதியின் வங்கியிடம், முதல் பிரதிவாதியின் படிப்பு செலவிற்காக பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து கடந்த 13.09.2013-ம் தேதி அன்று கடன் கேட்க, மேற்படி கடன் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த வாதியின் வங்கியானது

பிரதிவாதிகளுக்கு அன்றைய தினமே ரூ.4,00,000/-ஐ கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்கு பிரதிவாதிகள் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்து, பணத்தை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு, வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையினையோ, வட்டியையோ செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள். எனவே, வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.6,35,277/-ஐ 10.90% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) முதல் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாவது பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை அவரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் கடன் தொகை பெற்றுள்ளார்கள் என்கின்ற சங்கதி உண்மையானது. பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையினை திருப்பி செலுத்தவில்லை என்கின்ற சங்கதி பொய்யானது. வாதி வங்கியால் பராமரிக்கப்படும் கடன் கணக்குப் புத்தகத்தின்படி, கடனில் ரூ.6,35,277/- தொகை அடுத்தடுத்த வட்டியுடன் செலுத்த வேண்டியுள்ளது என்றும், பிரதிவாதி ஆண்டுக்கு 10.95% வட்டி செலுத்த வேண்டியிருக்கும் என்கின்ற சங்கதி பொய்யானது. பிரதிவாதிகள் செலுத்திய தொகையை வாதி வங்கிக்கு வரவு வைக்கவில்லை. மேலும் கல்விக் கடனுக்கான வட்டி விகிதம் அதிகமாக உள்ளது. வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. எனவே, வாதியின் வழக்கினை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்கள்.

**3) வழக்குரை, எதிர்வழக்குரை வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது.**

1. Whether the plaintiff is entitled Judgment and Decree as prayed for?
2. To what other reliefs?

4) வாதி தரப்பில், வாதி வங்கியின் கிளை மேலாளர் விக்னேஷ் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

6) **தீர்வு :–**

6 (1) வா.சா.1 அவரது முதல் விசாரணையில், இவ்வழக்கின் வாதியின் வங்கியிடம், முதல் பிரதிவாதியின் படிப்பு செலவிற்காக பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து கடந்த 13.09.2013–ம் தேதி அன்று கடன் கேட்க, மேற்படி கடன் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த வாதியின் வங்கியானது பிரதிவாதிகளுக்கு அன்றைய தினமே ரூ.4,00,000/–ஐ கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்கு பிரதிவாதிகள் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்து, பணத்தை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு, வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையினையோ, வட்டியையோ செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள் என்றும், எனவே, வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.6,35,277/–ஐ 10.90% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

6 (2) வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் ரூ.4,00,000/– கடன் வாங்கியுள்ளார் என்கிற சங்கதியையும், அதற்காக பிரதிவாதிகள் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கிற சங்கதியையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு, வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய

நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாதது அவர்களுக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் கடன் வாங்கியுள்ளார் என்கிற சங்கதியையும், அதற்காக பிரதிவாதிகள் ஆவணங்கள் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்கிற சங்கதியையும் வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் வாதி நிரூபணம் செய்துள்ளதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

**7) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.6,35,277/–ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.4,00,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வருட வட்டியும் சேர்த்து இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.16 16:57:23 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – விக்னேஷ் (வாதி வங்கியின் கிளை மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.09.2013 | கல்வி கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | 13.09.2013 | Sanction Memorandum |
| வா.சா.ஆ.3 | 13.09.2013 | General Agreement |
| வா.சா.ஆ.4 | 13.09.2013 | Agreement |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 14.08.2013 | போனபைடு மற்றும் கட்டண சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | 13.09.2013 | உறுதிமொழி கடிதம் |
| வா.சா.ஆ.7 | 27.03.2015 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.8 | 01.09.2016 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.9 | 18.12.2018 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.10 | 12.06.2020 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.11 | 10.02.2022 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.12 | | கடன் கணக்கு பட்டியல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**இல்லை
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.16 16:57:28 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.